# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

மூன்றாம் காலாண்டு, 2018

# அப்போஸ்தலருடைய நடபடிகள்


1. நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (ஜூன் 30–ஜூலை 6) ....................6
2. பெந்தெகொஸ்தே (ஜூலை 7–13) .................... 14
3. ஆதிகாலச் சபையின் அனுபவம் (ஜூலை 14–20) .................... 22
4. சபையின் முதல் தலைவர்கள் (ஜூலை 21–27) .................... 30
5. பவுலின் மனமாற்றம் இயேசு (ஜூலை 28–ஆகஸ்ட் 3) .................... 38
6. பேதுருவின் ஊழியம் (ஆகஸ்ட் 4–10) .................... 46
7. பவுலின் முதல் நற்செய்தி பயணம் (ஆகஸ்ட் 11–17) .................... 54
8. எருசலேம் ஆலோசனைச் சங்கம் (ஆகஸ்ட் 18–24) .................... 62
9. இரண்டாவது நற்செய்தி ஊழியப்பயணம் (ஆகஸ்ட் 25–31) .................... 70
10. மூன்றாவது நற்செய்தி ஊழியப்பயணம் (செப்டம்பர் 1–7) .................... 78
11. எருசலேமில் கைது (செப்டம்பர் 8–14) .................... 86
12. சிசெரியாவில் சிறைவாசம் (செப்டம்பர் 15–21) .................... 94
13. ரோமுக்குச் செல்லுதல் (செப்டம்பர் 22–28) .................... 102



பாட ஆசிரியர்

**வில்சன் பரோஸ்கி**

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை – 600 048




பெரும்பாலும் யூதர்கள் அடங்கிய ஒரு சிறு கூட்டத்தார் உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு புறப்பட்டுச்சென்ற அந்த முப்பது வருட காலக்கட்டம்தான் உலக வரலாற்றிலேயே மிகமுக்கியமான காலக்கட்ட மென்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள். அந்த முக்கியக் காலக்கட்டத்தில் நிகழ்ந்த சம்பவங் கள்தாம் அப்போஸ்தலரின் நடபடிகள். கி.பி. 31இல் கிறிஸ்து உயிர்த்தெழுந்தது முதல் கி.பி 62இல் ரோம் சிறையில் பவுல் அடைக்கப்பட்ட காலம் வரையிலுமான விபரங்கள் அதில் உள்ளன. அப் 28:30. அச்சம்பவம் நடந்த சிறிதுகாலத்தில் அப்புத்தகம் எழுதப் பட்டிருக்கவேண்டும்; ஏனென்றால், அந்தச் சம்பவத்தோடு அப்புத்தகம் முடிகிறது. ஆனால், பவுல் அந்தச் சிறையிருப்பிலிருந்து அதன்பிறகு விடுவிக்கப்பட்டார்; தொடர்ந்து ஊழியப்பணிகளைச் செய்தார்; எங்கும் சென்று பிரசங்கித்தார்; சில வருடங்கள்கழித்து ரோமில் கைதுசெய்யப்பட்டு, கி.பி.67இல் மரணதண்டனை பெற்றார்.

புத்தகத்தின் ஆசிரியர் பற்றி அதில் விபரமேதுமில்லை; ஆனால், லூக்காதான் எழுதி யிருக்க வேண்டும் என்பது சபையின் பாரம்பரியக் கருத்து; 'பிரியமான வைத்தியன்' என்று கொலோ 4:14 இவரை அழைக்கிறது; பவுலின் ஊழியப்பயணங்களில் உடனிருந்த வர் என்று 2தீமோ 4:11 உம் பிலே 24 உம் கூறுகின்றன. மூன்றாம் நற்செய்திப் புத்தகத்தை எழுதியதும் இவரே என்றும் பாரம்பரியமாக நம்பப்படுகிறது. அப் 1:2இல் 'முதலாம் பிரபந்தம்' என்று அது குறிப்பிடப்படுகிறது. ஒப்பிடவும்: லூக்கா 1:3. கிறிஸ்தவமார்க்கத் தின் துவக்கம்குறித்து விவரிக்கும் இரு தொகுப்புகளாக லூக்காவும் அப்போஸ்தலர் நட படிகளும் உள்ளன; அதாவது கிறிஸ்தவ மார்க்கத்தின் தோற்றம்பற்றியும் (இயேசுவின் வாழ்க்கை, ஊழியம்), அது பரவியதுபற்றியும் (அப்போஸ்தலர்களின் ஊழியப்பணிகள்) அப்புத்தகங்கள் சொல்கின்றன.

இரு புத்தகங்களையும் சேர்த்தால் புதிய ஏற்பாட்டில் 27 சதவீதம் ஆகும்; தனியொரு ஆசிரியரின் மிகப்பெரிய பங்களிப்பு அது. கொலோசேயருக்குப் பவுல் எழுதும்போது, புறஜாதியாருக்கு ஊழியம்செய்த தன் உடன்வேலையாட்களில் ஒருவராக லூக்காவைக் குறிப்பிடுகிறார்; 'விருத்தசேதனமுள்ளவர்கள்' என்று பவுல் குறிப்பிடும் நபர்களில் லூக்கா வைச் சேர்க்கவில்லை. கொலோ 4:7-14. எனவே, புதிய ஏற்பாட்டை எழுதியவர்களில் யூதனல்லாத ஒரே ஆசிரியர் லூக்காதான்.

இதுவும் பவுல் சொல்கிற ஒரு முக்கிய கருத்தை வலியுறுத்துகிறது; அதாவது, **'இரட்சிப்பு எல்லா மனிதருக்கும் உரியது'** எனும் கருத்து. தேவனிடம் பட்சபாதம் இல்லை. இனம், சமுதாய அந்தஸ்து, ஆண்-பெண் பாகுபாடு பார்க்காமல் எல்லாருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவே சபையை ஏற்படுத்தியுள்ளார். *அப் 1:8; 2:21,39,40; 3:25; 10:28,34,35.* தங்கள் சௌகரியத்தை முன்னிட்டோ, பாரபட்ச எண்ணத்தோடோ சுவிசேஷத்தை அறிவித்தால், அது சத்தியத்தை திரிப்பதாகும்; தேவ வார்த்தையின் அடிப்படைக்கே அது எதிரானது. நாம் அனைவரும் தேவனுக்குமுன்பாகச் சமம்; இயேசு கிறிஸ்துவில் கிடைக்கும் மீட்பு தேவைப்படுகிற பாவிகள்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் மூன்றில் இரண்டு பகுதி முழுவதும் 'புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனான' பவுலைச் சுற்றியே உள்ளன. *ரோமர் 11:13.* அதாவது லூக்காவின் கதாநாயகனே பவுல்தான்; அதற்குக் காரணம் இல்லாமலில்லை.

வேறு முக்கியக் கருத்துகளும் அப்போஸ்தலர் புத்தகத்தில் காணப்படுகின்றன. அதாவது, தேவனுடைய ஆளுகை மற்றும் அவருடைய தெய்வீக நோக்கங்கள். *அப் 17: 24,25; 20:27; 23:11.* ஆண்டவரும் இரட்சகருமாக இயேசு போற்றப்படுதல். *அப் 2:32,36; 3:13,15; 4:10-12; 5:30,31.* குறிப்பாக ஊழியப் பணியைச் செய்வதற்காக ஆவியானவர் சபையைப் பெலப்படுத்தி, வழிநடத்துவது. *அப் 2:1-4; 4:24-31; 8:14-17,29,39; 10:19,20.* போன்றவையாகும். மனித ஞானத்தாலோ திறமையாலோ ஆதிகாலச் சபை எதையும் சாதிக்கவில்லை; ஆனாலும், எந்த அப்போஸ்தலனும் செய்யாத அளவுக்கு அல்லது செய்திருக்க முடியாத அளவுக்கு உலகத்தில் ஒரு தாக்கத்தை உண்டாக்க, பவுலைப் பயன்படுத்துவது தேவனுக்குப் பிரியமானதாக இருந்தது. *1கொரி 15:10.*

**ஆதிகால சபையின் மலரும் பருவம்பற்றி அப்போஸ்தலர் பேசுகிறது; சபை நிர்வாகத்திலும், தேவனைப் புரிந்துகொள்வதிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அப்போது உண்டானது.**

ஆதிகாலச் சபையின் மலரும் பருவம்பற்றி அப்போஸ்தலர் பேசுகிறது; சபை நிர்வாகத்திலும், தேவனைப் புரிந்துகொள்வதிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அப்போது உண்டானது. 'இயேசுவின் இரண்டாம் வருகை எப்போது?' 'புறஜாதியாரின் நிலை என்ன?', 'இரட்சிப்பில் விசுவாசத்தின் பங்கு என்ன?' போன்ற கேள்விகளை சபை கையாண்ட விதம் அதற்குச் சிறந்த உதாரணங்கள். குறுகிய காலக்கட்டத்தில் பெரிய சாதனையை ஆதிகாலச் சபை செய்தது; ஒரு விஷயத்தை இது தொடர்ந்து சாட்சியாகக் காட்டி வருகிறது; அதாவது, தங்கள் இருதயங்களைத் தாழ்த்தி, ஜெபித்து, தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளையும் தாண்டி ஒற்றுமையோடு வாழ்ந்து, தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் கொண்டுவர நாம் ஆவியானவரை அனுமதித்தால், நாம் என்ன சாதிக்கலாம் என்பதற்குச் சாட்சிகளைத் தருகிறது.

ஊழியத்தைத் துவங்கும்படி தேவன் அனுப்பிவைத்தவர்களின் வரலாறுதான் அப்போஸ்தலருடைய நடபடிகள்; அந்த ஊழியத்தை நிறைவேற்றும்படி தேவன் அழைத்திருக்கும் நாம் அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?

*வில்சன் பரோஸ்கி, சான் பாலோவின் எங்கெனெய்ரோ கைலோவில் உள்ள பிரேசில் அட்வென்ட்டிஸ்ட் பல் கலைக்கழகத்தில் புதிய ஏற்பாட்டுப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழத்தில் புதிய ஏற்பாட்டில் முனைவர் பட்டம் பெற்றவர் (2004). பிறகு, ஜெர்மனியில் உள்ள ஹைடல்பர்க் பல்கலைக்கழகத்தில் முனைவர் படிப்புக்குப் பிந்தைய ஆராய்ச்சிப் படிப்புகளை முடித்திருக்கிறார். (2011).*

# மனன வசனங்கள்

1 பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சி களாயிருப்பீர்கள் என்றார். அப்போஸ்தலர் 1:8.

2 இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாய் இருக் கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத் தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறது மாகிய இதைப் பொழிந்தருளினார். அப்போஸ் 2:32,33.

3 அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத் தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்க ளெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அப்போஸ்தலர் 2:46,47.

4 தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள். அப்போஸ்தலர் 6:7.

5 நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அப் போஸ்தலர் 9:15.

6 பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (என்றான்). அப் 10:34,35.

7 ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், மோசேயின் நியாயப் பிரமாணத்தினாலே நீங்கள் எவை களினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப் படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான். அப்போஸ்தலர் 13:38,39.

8 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப் படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோ மென்று நம்பியிருக்கிறோமே. அப் 15:11.

9 இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். அப் 18:9,10.

10 என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்பு கிறேன். அப் 20:24.

11 அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார். அப்போஸ்தலர் 23:11.

12 நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன். அப்போஸ்தலர் 26:29.

13 பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். அப் 27:24.